பதிவைப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

ஸ்தாபிதம் (1889)

DUPLICATE

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	ஆ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௬௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி ஹூ ஐப்பசிமீ ௨௰உ (1923 நவம்பர் 5) திங்கட்கிழமை. { இலக்கம்—௬௪.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா னுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

(Standard Tiles.)

இவை வேரோக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டுள் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகசௌக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனைய ஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(H. 18)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென மேலும் பெருகும். தொத்து ரோய், அவமிருத்து தோஷம், மோகினியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், கோட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
பழனி. S. I.

(Q. 40)

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

மூலத்திற்கு குருநாகபஸ்பம்

ஆப்றேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு காட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மேடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி. S. I.

(H. 19).

உலகேங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பி. சார்ஜ் வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2

பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரு 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை, பழனி. S. I.

(Q. 41.)

காகிதாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் நைஸ் நூலினால் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்

(Y. 18)

தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

(H. 16.)

"பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டவுடனேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள் சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி

சருவஞானோத்தர ஆகமம்.

ஞானபாதம் தமிழ் மூலமும் முத்திரந்த விருத்தியும்.

இது ஸ்ரீ கண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசிக்கருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்பெறும்.

☞ பொ முத்தையபிள்ளை,
சிவாகம சங்கம்,
தேவகோட்டை.

(H. 20)

ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொத்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு கன்றுயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயுமிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமிகோயில்
காரியதரிசி.

(Q. 45)

விளம்பரம்.

இதன்கீழ்க் கையொப்பமிடும் வண்ணார்பண்ணை-மேற்கு சிவசுப்பிரமணியக்குருக்கள் சிவசங்கரஐயராகிய நான் இத்தால் வெளியரங்கப்படுத்துகிறதாவது.

என்பேருக்கு கொடிகாமம் சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம் 1923ஆ ஐப்பசிமீ 2ஆ ரூ. 500-க்கு எழுதித்தந்த வாக்குமுறிப் பத்திரத்தை இழந்துவிட்டேன் என்றும் இனிமேல் அதுவாக் குமுறிப்பத்திரம் பெலனற்றதாக விருக்கும் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

சி. சிவசங்கரஐயர்,
27-உ அக்டோபர்மீ 1923.

(Mis. 406.)

தீபாவளி நெருங்கிவிட்டது.

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்சானுக்களும், நயம் 120 நெ. 100 நெ. 80 நெ. நூலில் பலகலர் பட்டிலும் வெள்ளி ஜரிகையிலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டிலும் ஜரிகையிலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையிலும் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் கோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம்,
ஜவுளி சேலம்,
Javuli Salem.

கா கோ. அ. வெ கு ஒபுளிசெட்டியார் & Co,.
ஜவுளிவியாபாரம் கொகை சேலம்.

(Q. 44)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோத்காரி௵ ஐப்பசி௴ 20௳ திங்கட்கிழமை.

இதுவே சமையம்.

தவறணைகளை நீக்குதற்குச் சம்மதங் கொடுக்கும் நோக்கமாக நிறைவெறியோடு வந்து "தவறணை வேண்டாம்" என்று சொன்ன ஒருவரை மாகாணாதிபதி நோக்கி "இவ்வளவு வெறியோடு வந்திருக்கிற உனக்குத் தவறணை இல்லாமற் காலம் போகுமா? எப்படி வேண்டாமென்று சொல்லுகிறாய்?" என்று கேட்டபொழுது அவர் "ஐயா, நான் குடித்துக் கெட்டு விட்டேன் என்பது எனக்குத் தெரியும். எனக்குப் பின் வரும் என் வழித்தோன்றல்களும் இவ்வாறு கெட்டுப்போகாமலே தவறணை வேண்டாம் என்கிறேன்" என்று கூறினர். இவ்விடை மாகாணாதிபதிக்கு மாத்திரமன்றி அங்குநின்ற மற்றையோர்க்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது. மதுபானஞ் செய்தலை, ஆன்றோர்கள் விலக்கிய நியாயம் என்னையெனில், அது தீயகுணங்களெல்லாவற்றையும் கோத்து நிற்கும் நூல்போலிருத்தலினாலேயாம். கொலை களவு முதலிய எவ்வகையான பெரும் பாதகங்களைச் செய்பவனுக்கும் அத்துணை மதிமயக்காது. கள்ளருந்தவே ஒருவனுடைய நல்லறிவு அறவே கெடும். கெடவே, எவ்வகையான தீய செயல்களையும் செய்ய எவப்படுவான். உடனே எல்லாத் தீயகுணங்களும் அவனிடத்தில் வந்துதிக்கும். இதுபற்றியே மதுபானம் தீயகுணங்களெல்லாவற்றையும் கோத்து நிற்கும் கயிறு என்றனர் பெரியோர். ஆதலினால் இப்பகையை வேரோடும் களைந்துவிடத்துத்தான் எம் சந்ததி விருத்தியாகும்; நற்குணங்கள் எம்மனோர்க்கு உதிக்கும்; எம் நாடு ஈடேறும்.

தவறணைகள் சிலவற்றை நீக்க மற்றத் தவறணைகளில் மது அதிகமாக விலைப்படுகின்றதே இதனால் என்ன பிரயோசனம்? என்று அநேகர் கூறுவர். ஒருவன் ஒரு காரியத்தைச் செய்து அனுகூலப்படுவதற்கு, இடம் பொருள் ஏவல் மூன்றும் வேண்டும். இம்மூன்று முடையார் தனவந்தராகவும் பெரியாராகவும் மதிக்கப்படுவர். படவே, அவர்களுக்கு மதுவருந்துதல் அவமானமாகும். அவர்கள் அத்தொழிலிற் றலையிடார். இவைகள் இல்லாதவர்கள் அல்லது மட்டாக உள்ளவர்களே இது செய்தற்கேவப்பட்டுத் தீமை விளைப்பர். ஆதலினால் அறிவுடையோரும் செல்வாக்குள்ளவர்களும் மதுபானம் விலைப்படுந் தவறணைகளை நீக்கிவிட இப்பொழுது மதுவருந்தும் பழக்கமுள்ளவர்கள் மாத்திரம் வேறு தவறணைகளுக்குச் சென்றாவது மதுவருந்துவர். பழக்கமில்லாத மற்றையோர், தவறணைகளில்லாதவிடத்து மதுவருந்தும் பழக்கத்தையும் கைக்கொள்ளார். ஆகவே காலஞ் செல்லச் செல்ல மதுவருந்தும் வழக்கம் குறையுமேயன்றி தவறணைகளை வைத்துக் குடிப்பதற்கு வேண்டிய வசதிகளையும் கொடுத்து அரசாட்சியாரின் துணையும் இருக்கும் இக்காலத்திற்போல எங்கும் பரவமாட்டாது.

வண்ணார்பண்ணையிலுள்ள 6-ம் 7-ம் நம்பர்க் கள்ளுத்தவறணைகளையும் 3-ம் நம்பர்ச் சாராயத் தவறணையையும் நீக்குவதற்கு நவம்பர்௴ 17௳ சனிக்கிழமை இந்துக்கல்லூரியிலும், கொக்குவில் மேற்கு சி. எம். எஸ். மிஷன் பாடசாலையிலும் சம்மதம் கொடுக்கும் நாளாக அரசாட்சியார் நியமனஞ் செய்திருக்கின்றனர். சம்மதி கொடுக்க உரிமைபூண்ட அபிமானிகளாயுள்ளவர்கள் இந்தச் சமையத்தைத் தவறவிடாது தங்கள் தலைவரிப்பணப் பற்றுச்சீட்டுடன் சென்று குறித்த இடங்களில் மனப்பூர்வமாகச் சம்மதஞ் சொல்லல் வேண்டும். அவ்வளவில் மாத்திரம் அமையாது இத்தவறணைகளை அகற்றுதல் இப்பொழுது தங்களுக்குமாத்திரம் நன்மை பயப்பதோடு காலகதியில் தங்கள் சந்ததியாருக்கும் நன்மை பயக்குமென்பதை உணர்ந்து இச்சற்கருமத்தைச் செய்தல் வேண்டும். நமது அயற் கிராமங்களில் வரிப்பணங் கொடுப்போரில் நூற்றுக்கு 75 பேர் வீதம் சம்மதி கொடுக்குங் காலத்திலேயே அங்கங்குள்ள அபிமானிகளின் இடையறா முயற்சியினால் தவறணைகள் முற்றாக அகற்றப்பட்டன. சனத்தலைவர்களும் நியாயதுரந்தரர்களும் தேசாபிமானிகளும் செல்வம் செல்வாக்குடையவர்களும் மலிந்திருக்கும் வண்ணார்பண்ணைப் பகுதியில் வரிப்பணங் கொடுப்போரில் நூற்றுக்கு 60 வீதம் சம்மதி கொடுக்கப் போதியதாயிருக்கும் இச்சமையத்தில் வண்ணார்பண்ணைப் பகுதியிலுள்ள குறித்த மூன்று தவறணைகளையும் முற்றாக நீக்கத் தவறினால், நாட்டார் கேட்டு நகையாடுவரென்பது திண்ணம். மேலும் இப்பெருந் தீமையொன்றே இங்குள்ள சைவர் கிறீஸ்தவர் இஸ்லாமானவர் புத்தர் என்று சொல்லப்படுகின்ற நான்கு வகுப்பினராலும் ஒத்து நீக்கத்தக்கது.

யாழ்ப்பாணப் போதனா கல்லூரி.

கௌரவ வித்தியாகர்த்தர் அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை இக்கல்லூரியைப் பல பிரபுக்கள் சமுகத்தில் ஆரம்பித்தனர். பல வருடங்களாய்க் கிறீஸ்த மிஷனரிமாரால் நடாத்தப்பட்ட போதனா வித்தியாசாலைகள் கோப்பாயில் ஐக்கிய போதனாசாலை என்னும் நாமத்துடன் சைவசமயிகளுடைய உதவியையுங் கொண்டு சில வருடங்களாய் நடைபெற்றது. அவ்வித்தியாசாலையை அரசினர் ஓர் அரசாங்க போதனா கல்லூரியாய் ஸ்தாபித்திருக்கின்றனர். மேற்கூறிய ஆரம்ப தருணத்தில் கூடியிருந்த கல்விமான்களின் மகாசபையும் ஆங்கு செய்யப்பட்ட பிரசாரணங்களும் அரசினர் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிக்குந் தக்க காத்திரம் பொருந்தியனவாய்க் காணப்பட்டன. கௌரவ வித்தியாகர்த்தரவர்கள் போதனா முறைகளைக் குறித்துப் பேசியவை யாவும் எல்லா ஆசிரியர்மாராலும் கவனிக்கப்படத்தக்கன. சேர் அம்பலவாணர் கனகசபை அவர்கள் செய்த பிரசாரணத்தில் போதனா கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலங் கற்பிக்கப்படவேண்டுமென்று பேசியதை நாமனுவதிக்கின்றேம். தமிழ்ப் போதனாகல்லூரி மாணவர் தமிழையே நன்கு கற்று அதிற் தக்க பாண்டித்தியமடையவேண்டியது தகுதியெனினும், அவர்க்கு ஆங்கில பாஷையுங் கற்பிக்கப்படவேண்டியது அத்தியாவசியகமாயிருக்கின்றது. காலத்துக்குக் காலம் நவம் நவமாய் அநுசரிக்கப்பட்டுவரும் போதனா முறைகளை ஆங்கில நூல்களில் வாசித்துணர்ந்து கையாடுவதற்கு ஆங்கில அறிவு மிகவு மவசியமென்பதை யாவரு மொத்துக்கொள்வர். அதுவுமன்றிப் பொது அறிவு பெறுதற்கும் ஆங்கில மவசியம். கத்தோலிக்க பாடசாலைகளின் மானேசரும் ஒரு பெருங் குருவுமாகிய கனம் "போ" அவர்கள் ஓர் சிறந்த பிரசாரணஞ் செய்தனர். ஆசிரியர் குருத்தொழில் செய்பவருக்கு நேரே அடுத்த படியினரென்று அவர் சொன்னது எல்லா உபாத்திமாருங் கவனமாய்ச் சிந்திக்கத்தக்கது. ரூபா சதத்துக்காக மாத்திரம் தம் தொழிலை நடாத்துபவர் சரியான உபாத்தியாயராகாரென அவர் வற்புறுத்திக் கூறியது ஆங்குச் சமுகமாயிருந்த எல்லா உபாத்திமாருடைய மனங்களிலும் போதனா கல்லூரி மாணவருடைய மனங்களிலும் நன்றாய்ப் பதிந்திருக்குமென்று நாம் நம்புகின்றேம். பிரபல உவெஸ்லியன் மிஷனரியாயும் அநேக வித்தியாசாலைகளின் மானேசராயும் இருக்கும் கனம் லொக்வூட் அவர்கள் பேசிய பேச்சு அவர் ஐக்கியபோதனா வித்தியாசாலையின் அதிபராயிருந்து அதை நடாத்திய திறமைக்கும் அநுகூலத்துக்குந் தக்க சான்றாயிருந்தது. போதனாகல்லூரியை நடாத்துவது மிகவுங் கஷ்டமான காரியமென்றும் போதனா மாணவர்களுடைய தேகசுகம், மனோசுகம், ஒழுக்கம் முதலியவற்றை விசேடமாய்க் கவனிக்கவேண்டியது கல்லூரி யதிபரின் பெருங் கடமையென்றும் அவர் கூறினர். அவர் பேசிய பேச்சு அவருடைய பூரணவநுபவத்திலிருந் தெழுந்ததாதலால், அதை யாவரும் முழுமனதோடும் அங்கீகரிக்கவேண்டியதாயிற்று.

இப்பொழுது புதிதாய் ஸ்தாபனம் பெற்றிருக்கும் அரசாட்சிப் போதனா கல்லூரியினதிபரையும் ஆசிரியரையும் நாம் நன்கு அறிவோம். அவர்களியாவரும் தங்கள் கடமைகளைச் செவ்வனே செயக்கூடிய கல்வியறிவொழுக்கங்களிலும் அநுபவத்திலும் சிறந்தவராதலின் கல்லூரி நல்லநுகூலமடையுமென்பது நமது நம்பிக்கை.

போதனாகல்லூரியிற் பயிற்றப்படும் மாணவர் தமிழ்க் கழகங்களிற் பிரதமாசிரியராய்க் கடமை புரியும் தகைமையுமாற்றலும் பெறுபவராதலின், யாழ்ப்பாணப் போதனா கல்லூரி தன்னிலக்கும் இலக்குக்குமேற்ற சேவை புரிந்து கிரிமேற் றீபம்போல் எக்காலமும் நின்று நிலவுமென்று வித்தியாபிமானிகள் யாவருங் காத்திருக்கலாம்.

பணி செயல்.

("சித்தாந்தம்" என்னும் பத்திரிகையிலிருந்து அநுவதித்தது.)

இது பணியைச் செய்தல் அல்லது பணித்ததைச் செய்தல் என விரிந்து பொருள் தரும். பணித்ததைச் செய்தல் என்னும் பொருளைக்கொள்வோமாயின் இட்ட கட்டளையைச் செய்தல் என்பதே போந்த பொருளாகும். அது என்னையோவெனின் நூல்களால் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அது எற்றுக்கோ எனின் "அறம் பொருளின்பம் வீடு அடைதல்நூற்பயனே" என்றபடி நூலில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் அறம் பொருளின்பம் வீடு என்னும் புருஷார்த்தத்தை யடைய ஏதுவாகின்றது. ஆதலால், இவ்விதம் புருஷார்த்தத்தை யடைய ஏதுவாயிருக்கும் நூல் "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்ட" நூலாயிருத்தல் வேண்டும். "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ்வார்" என்றபடி பொறிவாயிலைந்தவியாது பொய்யொழுக்க நின்ற ஒருவர் கூறிய நூல் நீடுவாழ்வதற்கில்லையாதலால் அறிவின் முனைவன் ஆகிய இறைமைக்குணங்களெல்லாமுடைய இறைவனே கூறிய நூல் புருஷார்த்தத்தைத் தருவதாகும். அவ்வாறு போற்றப்பட்ட இறைவன் சிவபெருமானாவர். அவரால் அருளிச்செய்யப்பட்ட நூல்களே வேதங்களும் சிவாகமங்களுமாகும். "வேதம் பசு அதன் பால் மெய்யாகமம் நால்வர் ஓதும் தமிழ் அதனுள் ளுறுநெய் நெய்யின் உறுசுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான் செய்த தமிழ்நூலின் திறம்' என்றபடி வேதசிவாகமங்களும் தேவார திருவாசகங்களாகிய பன்னிரு திருமுறைகளும் சைவசாஸ்திரங்களாகிய பதினான்கு சாஸ்திரங்களும் உண்மை நூல்களாகும்.

இவற்றுள் விலக்கியன ஒழிதலும் விதித்தன செய்தலுமே புருஷார்த்தத்தை யடைய ஏதுவாம். இவற்றுள் வேதசிவாகமங்களை ஓதியுணர்ந்த பெரியார் திருவாக்கு பணிசெயல் மிகச் சிறந்ததென்று புத்திபோதிக்கின்றது. அதனை "பித்தனுமாகப் பின்னும் பேயனுமாக நீ இன்று, எத்தனை தீங்கு சொன்னாய் யாதுமற் றவற்றால் நாணேன், அத்தனைக்கு என்னை ஒன்று மறித்திலையாகில் நின்று, சித்தகம் பேசவேண்டாம் பணிசெய்ய வேண்டுமென்றார்."

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடனடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே."

என்னும் அருமைத் திருவாக்குகளே நிலைநிறுத்தும். என்னை? பணிசெயல் கட்டளையைச் செய்தல் எனின் எவ்வாறு கட்டளையைச் செய்தல்

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால், பிறவாழி நீந்த லரிது."

என்னும் பெருநாவலர் போதிப்பின் வண்ணம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினுள் சிந்தையு மனமும் செல்லாநிலைமைத்தாகிய வீடு நீங்கலாக ஏனைய மூன்றனுள் பொருளும் இன்பமுமாகிய சமுத்திரங்கள் அதனுட்பட்டாரை அழுந்தச்செய்தலேயன்றிக் கரையேறச்செய்வன வில்லையாதலால் அறம் ஒன்றையே கைக்கொள்ளல் அறக்கடவுளாகிய இறைவனது திருவடியை அடைவதற்குரிய தெப்பமாகும். ஏனெனில் எவ்வுயிரும் பிறவியாகிய பெருங்கடலை நீங்கி இறைவன் திருவடியாகிய மோக்ஷத்தையடைய அறம் ஒன்றே காரணமாதலால்.

இப்போது அறமென்பது எதுவென ஆராய்வாம். "சிறப்பு ஈனும் செல்வமு மீனும் அறத்தினூங்கு ஆக்க மெவனோ உயிர்க்கு" என்றபடி சிறப்பு என்னும் மோக்ஷத்தையும் செல்வமென்னும் தேவபோக முதலியவற்றையும் தருவது அறமாகும். ஆனால் சிறப்பென்னு மோக்ஷத்தைத் தருவது துறவறமென்றும், செல்வமென்னும் போகத்தைத் தருவது இல்லறமென்றும் அறிந்தோம். ஆயின் அறம் ஒன்றினைக் கைப்பற்ற எண்ணிய ஒருவன் இல்லறத்தை விரும்பி வாழ்க்கைத் துணைவியையடைந்து நன்மக்களைப் பெற்று அன்புடையவனாய்த் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும் ஐந்து கடமைகளைச் செய்து இனியனாகி அடக்கமுடைமை கொண்டு பொறையுடையனாய்ப் பயனிலாதவைகளைச் சொல்லாது புகழுடையவனாய் வாழினும் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றபடி இம்மையிற் புகழும் மறுமையில் தேவர்களில் ஒருவனாயும் இருக்கவே பயன்படுகின்றான்.

மக்கட்பிறவி பிறந்து நிலவுலகத்திலே பயன் துய்ப்பதும் வானுலகத்திலே தேவனாகிப் போகந்துய்ப்பதும் ஒருவன் இரும்பு விலங்கையும் பொன் விலங்கையும் தரித்ததுபோலாகுமேயன்றி வேறு எவ்வித பேதத்தையும் உண்டாக்காது. பிறவி என்னும் பெருங் கடலைத் தாண்டி முத்தி என்னுங் கரையைச் சேருவதற்குத் துறவறமொன்றே பயன் தருவதாகும். அத்துறவறத்தும் விரதம் ஞானமாகிய இரண்டனுள் அருளுடைமை முதல் கொல்லாமை ஈறாகிய விரதத்தையும் நிலையாமை முதல் அவா அறுத்தல் ஈறாகிய ஞானத்தையும் மேற்கொண்டவரே துறவிகளாவர். அத்துறவிகள் சென்ற வழியே மோட்சத்தை அடைய மார்க்கமாகும். அத்துறவிகளுள் சமயாசாரியருள் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் என்கடன் பணி செய்து கிடப்பதே என்று தாமருளியபடி ஏனையோர்க்கு தாம் பணித்த விதி விலக்குகளை, அவரது தேவாரங்களில் சில திருப்பாசுரங்களால் ஆராய்வாம்.

'ஆளாகார் ஆளானாரை அடைந்து உய்யார்
மீளா ஆள்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளாத சுரையோ தொழும்பர் செவி
வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே.'

என்றபடி ஆளாகார் என்றதால் இறைவனுக்கு அடிமையாகவில்லை என்பதும் ஆளானாரை அடைந்து உய்யார் என்றதால் இறைவனுக்கு அடிமைகளாய் அவன் திருவருளைப் பெற்ற அருளாளர்களை அடைந்து அவர் சொல்லியவழி நின்று பிறவிப் பெருங்கடலைத் தாண்டவுமாட்டார் அன்றியும் மீளாவாள் செய்து மெய்ம்மையுணிற்கிலார் என்றபடி மீளாத அடிமை செய்து மெய்ம்மை என்னும் இறைவன் திருவடியை அடையவுமாட்டார்கள். ஆதலால் தோளாத சுரையோ தொழும்பர் செவி, செவிகளில் துளைகளிருந்தும் அவை பயன்படவில்லையோ, வாளாமாய்ந்து மண்ணாகிக் கழிவரே, வீணாக இறந்து மண்ணோடு மண்ணாய்க் கழிகின்றார்கள் என்பதாகும்.

ஒவ்வொருவரும் பிறவியைக் கடக்கவேண்டுமாயின் இறைவனுக்கு ஆட்பட்டும் ஆட்பட்டார்க்கு அடிமை செய்தும் இறைவனடியைத் தியானித்தும் அவன் புகழைக் கேட்டும் வாயார வாழ்த்தியும் நிற்றல்வேண்டுமென்பதாம். இவ்விதம் செய்யார் மண்ணாகிக் கழிவது எதனாலெனின் "எழுதுபாவை நல்லார் திறம் விட்டு தொழுதுபோக கின்றேனையும் சூழ்ந்துகொண்டு உழுதசால் வழியே உழுவான்பொருட்டு இழுதை நெஞ்சம் இதென் படுகின்றதே" என்றபடி மனமானது மாதர்வலையிற் சிக்கி நல்ல வழியிற் செல்லாது தான் பலநாள் பழகிய அவரது ஒழுக்கத்திற் சென்று அவன் திருவடியை அடைய ஒட்டாது தடுக்கின்றதென்று கண்டாம். இவ்விதம் மயங்காது செல்லுவதற்குரியவழி "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை, சூழ்த்தமாமலர் தூவித் துதியாதே, வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே" என்றபடி அவனை வாழ்த்தவும் அவனை நினைக்கவும் அவனை வணங்கவும் வேண்டுமென்பதாயிற்று. ஆயின் அவனது திருவுருவம் ஈதென்று அறிந்தாலன்றி வாழ்த்துவதும் நினைப்பதும் வணங்குவதும் செய்வதும் எவ்விதமென்று ஆசங்கிப்பாரை நோக்கி "குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் அவன் நின்றதோர் நேர்மையும் அறிய ஆரணம் ஆயிரமோதினும் பொறியிலீர்மனமென்கொல்புகாததே" என்றபடி வேத சிவாகமங்களில் ஓதியபடி உருவம் அருவம் அருவுருவம் என்ற மூன்று திருமேனிகளையும் கொள்ளல்வேண்டுமென்பதாம்.

அதைவிட்டு எல்லாம் காட்சியளவாக அறிதல்வேண்டுமென்று ஆசங்கிப்பாரை நோக்கி

"மைப்படிந்த கண்ணாளும் தானுங்கச்சி மயானத்தான் வார்சடையான் என்னினல்லால், ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன் ஒரூரனல்லன் உவமனில்லி, அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே."

என்று விதந்துகூறினர். ஆதலால் இவரது திருவாக்கால் பணிசெய்து கிடப்பதென்றது வேதசிவாகமங்களிற் கூறிய உருவம் அருவம் அருவுருவம் இம்மூன்று திருமேனிகளையும் மனத்தால் நினைத்து வாயால் வாழ்த்தி தலையால் வணங்கி சரியை கிரியை யோகம் ஞானங்களாகிய நான்கனுள் சரியை முதலாகக் கொண்டு சரீரத்தால் ஆவனவெலாம் செய்து கிரியை யோக ஞானங்களை யடைவது என்பதாயிற்று. முடிந்த பொருளாகக் கூறின் "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீஇ அன்பரொடுமரீஇ மாலற

நேயம் மலிந்தவர் செய்கையும் ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே" என்ற சைவ சாத்திரப்படி இறைவனது திருவடியை அடைய பதி பசு பாச லக்ஷணங்களை யுணர்ந்து அவற்றின் பயன்தெரிந்து நல்லாசிரியனை யடைந்து தீக்ஷை பெற்று பிறவியாலாய பயனை அடைய ஞானமெய்தினவனாயினும் சிவபெருமானையும் அவனடியவரையும் திருக்கோயில்களையும் வழிபட்டு செய்யவேண்டிய செயல்களைச் செய்தலே பணிசெல்தல் என்று ஆயிற்று.

(வரும்).

சமாசாரம்.

காலநிலை:—இவ்வாரம் மழை நன்கு வெளித்திருக்கிறது. இடையிடையே பனி காணப்படுகின்றது.

எமது பத்திராசிரியர்:— நமது இந்து சாதனப் பத்திராசிரியராகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை யவர்கள் சென்ற சில நாட்களாகச் சுகவீனமாகவிருக்கின்றனர். அவர் விரைவிற் சுகமெய்தித் தமது கடமையை முன்போற் செய்யும்வண்ணம் சிவபிரான் திருவருள் முன்னிற்பதாக.

நெடுந்தீவு ஆட்கொலை:—நெடுந்தீவார் நாலுபேர்கூடி அயற்கிராமத்திலே வசிக்கும் ஒருவனுடைய ஐந்து ஆடுகளைப்பிடித்துக் கொன்று ஒரு வெளியிலேகொண்டு போய்ப் புதைத்து விட்டார்கள். மணியகாரன் மிஸ்டர். பி. ஜே. இராசா அவர்கள் இதுகாரியத்தை ஆராய்ந்து குறித்த ஆட்களைப்பிடித்து யாழ்ப்பாணப்பொலிஸ் நீதிபதிமுன்னே நிறுத்தினுர். பொலிஸ்நீதிபதி காரியத்தை விளங்கி அவர்களுள் இருவருக்கு ஆளுக்கு மூன்றுமாச கடின ஊளிய மறியலும் விதித்து அவர்களைக் கண்டுபிடித்ததையிட்டு மணியகாரனை வெகுவாக வியந்து கொண்டார்.—ச. வே. பா. கா-ன்.

வைசூரி:—அவிசாவலைப் பிரிவிற் பலருக்கு இந்நோய் கண்டிருக்கிறதாக அறியலானோம்.

சுப்பிறீங்கோட்டு நீதிபதி:—சீமைக்குச் சென்றிருந்த சுப்பிறீங் கோட்டுப் பிரதம நீதிபதியாகிய ஸேர் அன்றன்பேட்றம் இன்று கொழும்பில் வந்திறங்குவர்.

புகைரதத்தில் அகப்பட்டு மாண்டான்:—சென்ற வெள்ளிக்கிழமை கொள்ளுப்பிட்டிக்கும் பம்பலப்பிட்டிக்கு மிடையில் கொழும்புப் புகைரதத் தொடரொன்று வரும்போது பண்டா என்னும் ஒரு புகைரதப் போட்டர் அதில் அகப்பட்டு உடனே இருதுண்டாக வெட்டுண்டு மாண்டான்.

புகைரதப் பகுதியிற் சில திருத்தங்கள்:—இந்த மாசமுடிவினுள் 20 பிறேக்வான் வண்டிகள் பேராபத்துக் குதவக்கூடிய பொருட்களுடனும் உபகரணங்களுடனும் திட்டம் செய்யப்பட்டு இணைக்கப்படும். இந்த வருட முடிவினுள் இப்படியான 50 வண்டிகள் இன்னும் இணைக்கப்படுமாம்.

சாரதி நிரபராதியெனக் காணப்பட்டான்:—கொழும்பில் வேலுற்சவத்தன்று 4 செட்டிப்பிள்ளைகள் ஏறிச்சென்ற மோட்டர் ரதம் ஒரு மகமதிய வாலிபனை நெரித்துக் கொன்றுவிட்டதென இப்பத்திரிகையில் முன்னர் வெளியிட்டிருந்தோம். குறித்த சாரதி சென்ற வாரம் கொழும்புச் சுப்பிறீங் கோட்டில் விளக்கப்பட்டு நிரபராதி யெனக் காணப்பட்டான்.

மனைவியால்மாண்டான்:—கெனறற்கொடையைச் சேர்ந்த மாக்கிறிஸ் அப்பு என்பவன் கொலைக் குற்றத்திற்காக, 15 வருடச் சிறை விதிக்கப்பட்டிருந்தான். சிறைச்சாலையினின்றும் விடுதலையடைந்து வீட்டில் வந்து பார்த்தபோது, தன் மனைவி தன்னை விட்டுப் போய் விட்டாளென்பதைக் கண்டு மன வைரங் கொண்டு ஒரு மரத்திற் கயிற்றைமாட்டிச் சுருக்கிட்டுத் தற்கொலை செய்தான்.

சட்டநிரூபண சபை:—இச்சபைக் கூட்டமொன்று சென்ற வியாழக்கிழமை மேற்படி சபை மண்டபத்திற் கூடியது. இலங்கையைக் கடைசியா யாண்ட அரசனின் வழித்தோன்றலாகிய வெங்கட்டன்னுசாமிராஜா என்பவர் தமக்குக் கிடைக்கும் உபகாரச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்கவேண்டுமென்ற விண்ணப்பம் யோசிக்கப்பட்டது. விவாகம் செய்த பெண்களின் ஆதனத்தைக் குறித்த சட்டமும், மதுபானம் முற்றாக அகற்றப்பட்ட எல்லைக்குள் கள்ளுச் சேர்க்க மரங்கள் கொடுக்கப்படாதென்று கௌரவஸ்ரீ துரைசுவாமியவர்களால் எடுத்தாளப்பட்ட விஷயமும், பெற்றோல் எண்ணெய் வியாபாரிகள் பிறதேயங்களில் அதிகம் மலிவாக வாங்கி இலங்கையில் அதிகலாபம் கூட்டி விற்றலைத் தடுக்கவேண்டுமென்று கௌரவஸ்ரீ தம்பிமுத்து அவர்களால் கொண்டுவரப்பட்ட விஷயமும் யோசிக்கப்பட்டன. மேற்படி சபையின் அடுத்த கூட்டம் இந்த நவம்பர் மாதம் 15உ நடைபெறும்.

நானியவிலை:—மட்டக்களப்பிலே சென்ற சில்வருடங்களாக நெல் வேளாண்மை விருத்தியடைந்து விளைவு நல்ல பலிதமுடையதாயிருந்துவந்ததாலே அங்கு விளைந்த நெல்லு அப்பகுதியிலுள்ளோரின் சாப்பாட்டுக்குப் போதியதாயிருந்து வந்தது. ஆயின் இவ்வருடம் நெல் வேளாண்மை அங்கு நயப்படாததாலே அரிசி விலைபடியொன்று 20 சதத்திலிருந்து 30 சதம் ஏறி விட்டது. சென்றவாரத்திலங்கு போன சேடியக்கம் என்னும் கப்பல் கொழும்பிலிருந்து தொகையான இந்திய அரிசியை ஏற்றிப்போய்ப் பறித்தது.

சிறுபுசல்:—சென்ற 27ந் திகதி சனிக்கிழமை லேடிமக்கலம் எனுங் கப்பல் சுற்றுடாவிலே சாமான்பதித்துக் கொண்டு நிற்கும் போது ஒரு புசல் வீச அதனுலே சாமான்களை ஏற்றிப் பறித்துநின்ற தோணிகள் அபாயத்துக்குள்ளாய் அவற்றுள் இரண்டு சமுத்திரத்திலள்ளுப்பட்டுப் போயின. வேறுசில ஜெற்றியோடுமோதின.

நஷ்டபரிகாரம்:—மதவாச்சி கடுகனுவை என்னுமிடங்களிலே உண்டான றெயில்வே விபத்துக்களாலே இறந்தவர்களின் மனைவி மக்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நஷ்டபரிகாரஞ்செய்வதைக்குறித்து ஆராய்ந்து அறிக்கை செய்யும்படி நியமிக்கப்பட்ட கொம்மிற்றியார் தம்முடைய தீர்மானத்தை அரசினருக்குத் தெரிவித்திருக்கிறுர்கள். மதவாச்சியிலே விபத்துக்குள்ளானவர்களுக்கு 2,015 ரூபாயும் கடுகனுவையிலே விபத்துக்குள்ளானவர்களுக்கு 2,875 ரூபாயும் கொடுபட வேண்டுமென்பது கொமிற்றியாரின் தீர்மானமாகின்றது.

பாசியாலாப் படு கொலைகள்:—வியாங்கொடைக்குச் சமீபமாய் பாசியாலாவெனுமிடத்திலே பாய் எனும் நாமமுடைய ஒருவன் குரோதபைத்தியங் கொண்டவனுய் ஒரு கத்தியை எடுத்துத் தனது மனைவியையும் மாமியாரையும் குத்திக் கொன்றபின் ஆவேசமுற்றவன் போலச் சமீபமாய் இருந்த கடைக்குப் போய் அப்பகுதிவிதானையின் மைத்துனனை குற்றிப் படுகாயப்படுத்திவிட அதையறிவந்த பொலிஸ்விதானை ஒட்டத்திலே அவ்விடம் போக அவன் பொலிஸ் விதானையையும் சருவிக் கத்தியாலே குற்றிப் படுகாயப்படுத்தியதைக் கவனித்த விதானையின் சகோதரி தன் சகோதரனை அவன்கையினின்றும் உயிருடன் தப்புவிக்க ஓடிவரக் கொடியபாதகன் அவளையும் வாளுகத் தன் கையிலிருந்த கத்தியாலே குற்றிக் கடைசியாய் விதானையின் மனைத்தாக்கச்சென்றபோது அவன் அருந்தப்பாகத்தப்பிக் கொண்டான் காயமடைந்தார் எல்லாம் வைத்தியசாலையிலே ஆபத்தான நிலையிலிருக்கிறுர்கள் கொலைப்பாதகனும் வலியத் தன்னை ஒப்புக்கொடுக்கப்பொலிஸ் ஸ்ரேசனை நோக்கிப் போகும்வேளை பொலிசாராலே சிறைபிடிக்கப்பட்டான். —ச, வே. பாதுகாவலன்.

விவாகம்.

கொழும்பு நோடன் பிறேஸர் அன் கொம்பனியில் வேலையாயிருக்கும் ஸ்ரீ செ. மயில்வாகனமவர்கட்கும் வண்ணார்பண்ணை கிழக்கு ஸ்ரீ ச. பொன்னம்பலமவர்களின் ஏகபுத்திரியும் கொழும்பு சுப்பிறீம் கோட்டுத் தாணி ஸ்ரீ பாலசிங்கமவர்களினதும், சிவில்சேர்விஸ் உத்தியோகத்தராயிருக்கும் ஸ்ரீ சோமசுந்தரமவர்களினதும் சகோதரியுமாகிய சௌபாக்கியவதி தங்கம்மாளுக்கும் சென்ற சனிக்கிழமை யிரவு விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகளிருவரையும் எம்பெருமான் ஆசீர்வதிப்பாராக.

இந்திய சமாசாரம்.

தர்மபுரம்
பண்டாரசந்நிதி அவர்களின் மரணம்.

கொலை நடந்திருப்பதாகச் சந்தேகம்!

சென்ற 28-10-23 இரவு 10 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ பண்டாரசந்நிதி அவர்கள் சௌக்கியமான தேகத்துடன் படுக்கை அறை சென்று 29-10-23 காலையில் உயிர் துறந்த ஸ்திதியில் வெளிப்படுத்தப்பட்டு, சரீரத்தைச் சோதனை செய்ததில் சில முக்கியமான அவயவங்களில் காயமும் வீக்கமும் இருக்க; கொலை நடந்திருப்பதாகச் சந்தேகப்பட்டு ரெத்தினசபாபதி தம்பிரான் முதல் 8 பெயர்வழி வரையில் கைது செய்யப்பட்டிருக்கிறது. மாலையில் சிஷ்யபரம்பரையினரால் வழக்கப்போலத் திருமேனியை சமாதி செய்யப்பட்டது. மடத்தில் பிரதான அறைகள் சீல் வைக்கப்பட்டிருக்கிறது. பொலிஸ் கண்காணிப்புக் கடுமையாயிருக்கிறது.

—நியாயாபிமானி.

அஸ்ஸாம் மகாநாட்டில்
ஸ்ரீமான். ஆண்டிரூவின் முடிவுரை.

மாணவர்களுக்கு உபதேசம்.

அஸ்ஸாம் மாணவர்களாகிய உங்களுக்குள் சில பூர்வாங்கமான சந்தேகங்கள் இருப்பதாக எனக்குத் தெரிகிறது. அஸ்ஸாமி பாஷையை அப்படியே வைத்துக்கொண்டு வளர்ப்பதா? மற்ற மாகாணத்தவருக்கு அஸ்ஸாமில் உத்தியோகங்கள் காலியாகும்போது கொடுப்பதா? அஸ்ஸாம் மாகாணத்தின் நன்மையை மாத்திரம் கருதுவதா அல்லது தேச நன்மைக்கே பொதுவாகப் பாடுபடவேண்டுமா? என்பவை உங்களுக்குத் தோன்றியுள்ள சில சந்தேகங்களாகும். இந்த சந்தேகங்களைத் தீர்ப்பது கஷ்டமானகாரியந்தான், இவையெல்லாம் உங்கள் ஸ்தலத்தை பாதிக்கும் பிரச்சினைகள். ஆனால் மனித வாழ்வுக்கு அவசியமாயுள்ள சில முடிவான, திடமான, கொள்கைகளை உங்களுக்கு வற்புறுத்தி விட்டால் மற்றப் பிரச்சினைகளையெல்லாம் நீங்களே தீர்த்துக்கொண்டுவிட முடியும். முதலாவது, உங்கள் வருங்காலத்தைப் பற்றித் தெளிவாக ஒரு தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். மனிதவர்க்கம் பூராவும் வருங்காலத்தில் ஒன்றுபடத்தான் போகிறது. எவரும் வேலி போட்டுத் தடுக்க முடியாது. கான்யூட் என்ற அரசர் சமுத்திர அலைகளைத் தம் கிட்டவாக் கூடாதென உத்தரவு செய்தும் எப்படி அது பலிக்காமற் போயிற்றே, அது போல் வருங்காலத்தில் மனிதவர்க்கம் ஒன்றுபடுவதை எவரும் தடை செய்ய முடியாது. அதுபோல் நம் ஜாதியிலும் பாஷையிலும் வகுப்பிலும் வேறுபட்டிருப்பினும் கொஞ்சக் காலத்துக்குத்தான் அவை நம்மைப் பிரித்து வைக்க முடியும். ஒரு பொதுவான லட்சியத்தை நோக்கி உலகத்தார் சென்று கொண்டிருப்பதால் முடிவில் ஒன்று கூடத்தான் வேண்டியிருக்கும். ஒருஜாதி, ஒரு பாஷையில் தான் உலகம் வந்து முடியவேண்டும் மனிதவர்க்கத்தார் உண்மையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவான்றே? பாரமார்த்திக ஒற்றுமையைப் பிரிக்க இடமுண்டோ? "பிதாவேளி," "பிதாவே போதி" என்ற வார்த்தைகளின் கருத்தையுணர்ந்து நாம் பிரார்த்திக்கும் போது, அது மனிதவர்க்கத்தின் ஒற்றுமையைக் குறிக்காமல் வேறு என்ன பொருள்தரும்? நான் பேசுவது வெறும்புராணமென்று நீங்கள் கருதவேண்டாம். அது சாஸ்திரரீதியான உண்மையாகும். அந்த உண்மைதான் வரவர உலகத்தில் பிரத்தியட்சமாக புலப்பட்டுக்கொண்டு வருகிறது. கப்பல்கள் மூலமாயும் ஆகாய விமானங்கள் மூலமாயும் நாம் பரஸ்பரம் நெருங்கிக்கொண்டுவருகிறோம். அது இன்னும் விருத்தியாகி விட்டால் காலக்ரமத்தில் பல ஜாதிகளும் ஒன்றுபட்டு மனித வர்க்கம் ஒற்றுமையடைந்து விடுவதில் சந்தேகமென்ன? "வெள்ளையர் ஆஸ்திரேலியர்" "வெள்ளைக்காரத் தென் ஆபிரிக்கா" என்று சொல்லப்படுகிற வெள்ளையர்மேம்பாடெல்லாம் அப்போது மறைந்து போய்விடும். மூவாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்ததற்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் வித்தியாசமில்லையா? அதுபோல் தான் தற்காலத்துக்கும் பிற்காலத்துக்கும் மிகுந்த வித்தியாசமிருக்கும். அமெரிக்க கவர்ன்மெண்டின் ஆகாயக் கப்பல் ஒன்று வடகோடியைக் கடந்து ஜெப்பான், சீனு, ஸைபீரியா முதலிய தேசங்களுக்கு அடுத்த கோடை காலத்தில் பறந்து போகப்போவது உங்களுக்குத்தெரியுமா? அதன் அர்த்தம் உங்களுக்குப் புரிந்ததா? இந்த அகன்ற உலகம் நாளுக்கு நாள் சிறிதாகிக்கொண்டு வருகிறது. ஆகையால் மனித வர்க்கத்தின் விடுதலையும் வளர்ச்சியுந்தான் உங்களுடைய முக்கிய லட்சியமாயிருக்க வேண்டும், ஒன்று ஊராகி விடாது. உங்கள் தேசமொன்று தான் உலகமென்று கருதிவிடக் கூடாது. குறுகிய புத்தியுடன் நான் கிறிஸ்தவன், நான் ஹிந்து, நான் முகம்மதியன் என்று சொல்லிக் கொள்ளக் கூடாது. ஹிந்துஸ்தானிகாரன், வங்காளி, என்று மாகாணவாரியாகப் பிரிவினை செய்து பேசுவதும் ஒழிய வேண்டும். உலகத்தார் அனைவரும் ஒரே ஜாதி, ஒரே மதத்தவர், ஒரே லட்சியமுடையவர் என்ற புத்தி படைத்திருப்பது தான் புத்திசாலிகளுக்கழகு.

சாஸ்திர ரீதியாக நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். என்னுடைய அனுபவத்திலிருந்து ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். இன்று காலை நான் தாமதிக்கு மிடத்திற்கு வெளியே ஒரு கிழவனைக் கண்டேன். இதற்கு முன் அவன் முகத்தை நான் பார்த்ததில்லை அக்கிழவன் அஸ்ஸாம் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிமான். நானோ கிறிஸ்தவன்; இங்கிலாந்தைச் சேர்ந்தவன். ஆயினும் பரஸ்பரம் நாங்கள் பார்த்தபோது, ஒரே நொடியில் என் மனம் அக்கிழவனிடத்திற் சென்றுவிட்டது. ஒருவார்த்தைகூட இருவரும் பேசவில்லை, மனம் மட்டும் ஒன்றுபட்டது. அப்பொழுது ஜாதி மதம் எல்லாம் இருக்கவிடந் தெரியவில்லை. அச்சம்பவத்தை நினைக்கும்போதெல்லாம் எனக்கு சந்தோஷமுண்டாகிறது. 'தத்வமஸி' என்றதன் கருத்தை அறிந்துகொண்டேன், மனித ஜாதி ஒன்றேதான். அந்த அத்வைத பாவம் ஏற்படவேண்டும். பண்டைக்கால ஆரியர்களுக்கு மனித வர்க்கத்தின் வருங்கால ஒற்றுமையில் நம்பிக்கை யிருந்ததாகத் தெரிகிறது. ஆரியர்கள் சொப்பனங் கண்டது இப்போது நிறைவேறிவிடும்போல் இருக்கிறது.

மனிதவர்க்கத்தின் பொதுவான க்ஷேமத்தில் சிரத்தைகொள்வதாயிருந்தால் நமது ஜாதி, நமது தேசம், நமது மாகாணம் என்ற அபிமானத்தைக்கூட இழந்துவிடுவதா என்று நீங்கள் கேட்கலாம். இதே கேள்வியை எத்தனையோ மாணவர் கேட்டிருக்கிறுர்கள். நீங்கள் இந்திய மாணவர்களாயிருந்தும் அப்படிப்பட்ட கேள்வி கேட்பதுதான் ஆச்சரியம். மனித வர்க்கத்தையே நீங்கள் அபிமானிக்கும்போது சொந்த தேசத்தாரை எப்படிப் புறக்கணித்தவராவீர்கள்? மனிதவர்க்கத்தினிடத்தில் அன்புகொண்டவனுக்குத் தன் சொந்த நாட்டாரிடத்திலும் சமமான அன்பிருக்கும். சாதாரண மனப்பான்மையோடு பாரமார்த்திக வாழ்வின் மேலான தன்மையை நீங்கள் உணர முடியாது. கணித சாஸ்திர உண்மைகளுக்கும் பாரமார்த்திக வாழ்வுக்கும் வெகு தூரம். திருஷ்டாந்தமாக கிறிஸ்தவ வேத புத்தகத்தில் "எவனொருவன் பிறருக்காக உயிரை விடுகின்றனே அவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டவனுவான்" என்று கண்டிருக்கிறது. கணிதசாஸ்திரப்படி பார்த்தால் மேற்கண்ட கூற்று அபத்தமாகத் தோன்றும் ஆனால் உண்மை அதுதான். மேலான தியாகிகளே அந்த வேதவாக்கின் கருத்தை முற்றிலும் உணர்வர். பிரதிதினமும் நமது வாழ்வில் தியாகத்தின் பலனை நாம் காணவில்லையா? மனிதவர்க்கத்துக்காகத் தியாகம் செய்வதென்று நீங்கள் உண்மையாகவே தீர்மானித்துக்கொள்ளும் பட்சத்தில், உங்கள் தேசத்தினிடம் உங்களுக்கு அபிமானங் குறைந்துவிடுமென்று ஒருகாலும் நீங்கள் பயப்படவேண்டாம் நமது ஞானிகளும் ரிஷிகளும் விட்டுவைத்துப்போன மகத்தான பொக்கிஷத்தை நன்கு பரிபாலிப்போம் சரியான வழியை அவர்கள் நமக்குக் காட்டியிருக்கிறுர்கள். தவறான வழியில் ஐரோப்பியர் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கிறுர்கள். சுயநலந்தான் அவர்களுக்குப் பெரிதாகக் காணப்படுகிறது. எல்லா துக்கங்களுக்கும், எல்லாக் கஷ்டங்களுக்கும் சுயநலமே காரணம் மற்றவர்களின் கதி எப்படியானுலென்ன, நாம் மட்டும் வாழ்வோம் என்ற மனப்பான்மை குறுகிய தேசாபிமானமாகும். பேராசையென்பது புத்தி ஸ்வாதீனமில்லாமற் செய்துவிடும். மனிதவர்க்கம் பூராவும் ஒரே குடும்பம் என்பதை இனியாவது ஐரோப்பா உணருமாக. ஏசுநாதர் அவ்வுயர்ந்த தத்துவத்தை போதித்திருந்தும், மகா யுத்தத்தின்பலனாக அதை ஐரோப்பியர் மறந்து விட்டனர். தேசாபிமானம் குறுகிய தன்மையுடையதாயிருந்தால் அதை ராட்சஸத் தன்மைக்கே ஒப்பிடலாம். எனக்கு இந்தியரிடத்தில் அன்புண்டு; அதிலிருந்து நான் இங்கிலாந்தை நேசிக்கவில்லையென்று நீங்கள் எப்படிச் சொல்லமுடியும்? இங்கிலாந்தை நேசியாமல் இந்தியாவைமட்டும் நான் நேசிக்கும் பட்சத்தில் என்னிடம் உங்களுக்கு மதிப்பிராது. இங்கிலாந்தை நேசியாமல் இந்தியாவை நேசிப்பதால் மதிப்புக் குறைவையே உண்டுபண்ணும். உண்மையான தேசாபிமானிகள் எந்த நாட்டையும் ஒரேமாதிரியாகத்தான் பாவிப்பர். சுயதேசம் என்பதற்காக அதிக அபிமானமும், மற்ற தேசத்தினிடத்தில் துவேஷமும் உடையவராகயிருப்பதாக தேசாபிமானிகள் சொல்லமாட்டார்கள்.

ஜலத்தில் நீந்துவோரைக் கண்டு நீந்தத் தெரியாதவர் ஆச்சரியப் படுவர். அதுபோல இந்த சாதாரணமான உண்மைகளை அறியாதவர்கள் நான் சொல்லுவதைக்கண்டு ஆச்சரியந்தான் அடைவர். குறுகிய தேசாபிமானமுடையவர்கள் தங்கள் நாட்டுக்கே தீங்கு விளைவிப்பவராவர். மனித வர்க்கத்துக்கு ஊழியம் செய்வது ஒரு பெரிய பாக்கியம். சந்தோஷமாக அவ்வேலையை ஏற்றுச் செய்ய வேண்டியது கடமை.

ஓர் உடைந்துபோன விளக்கின் பாகங்கள் எப்படியோ, அப்படித்தான் உலகத்திலுள்ள பல பாஷைகளும் மதங்களும். அவை ஒன்றுபட்டால்தான் உண்மையான வாழ்வு; அதுவே உண்மையான ஞானம்; அன்பும், ஊழியமும், சகோதரத்வமும், தியாகமுந் தான் அந்த லட்சியத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும், என்று சொல்லி விட்டு, அபினி உபயோகிப்பதை ஜனங்கள் நிறுத்தும்படியும், கையால் நூற்றுக் கையால் நெசவு செய்வதை ஒரு முக்கிய தொழிலாகக் கொள்ள வேண்டுமென்றும், அப்பொழுது தான் தரித்திரம் நீங்குமென்றும் சொல்லி முடித்தார்.

—சுதேசமித்திரன்.

இந்தியப் பெண்மணிகள் வரலாறு.

I

இராணி துர்க்காவதி.

தில்லிச் சக்கரவர்த்திகளில் மிகவும் பெருமையும் புகழுங்கொண்ட அக்பர் ஆட்சி புரியும் போது இந்துக்களையும் முஸ்லிம்களையும் சமமாகப் பாதுகாத்து வந்தார். அவரது புகழுக்குக் காரணமும் இதுவே. இமயமலை முதல் கடலோரம் வரையில் அநேக நாடுகளைத் தமது ஆணைக்கு உட்படுத்திவிட்டார். இந்தியாவின் நடுப்பாகத்திலுள்ளகருப்ப மண்டலம் அவர்வசமாகவில்லை. அது ஒரு பெரிய நாடு கேடுற்று எஞ்சியதற்கு அறிகுறியாக சுதந்திரமாக நின்றது. அதுகாலை இந்நாட்டைக் காத்துவந்தது ஒருபெண்பாலெனக் கூறின், அப்பெண்மணியின் தைரியமும், வீரமும், ஆட்சி முறையும் அறியற்பாலன.

இம்மாது கனியாகுப்ஜம் (கனேஜ்) நாட்டு அரசரில் ஒருவனுகிய சந்தனென்பவனுடைய மகள். அழகிலும் அறிவிலும் இவள் சிறந்து விளங்கினுள். கருப்ப மண்டலத்தில் சனத்தலைவனுன தற்பதஷாஹி என்பவனுக்குமனைவியாக விருந்தாள் காதலிருவர் கருத்தொத்து வாழவே ஒரு ஆண்மகவு பிறந்தது. வீரநாராயணனென அதற்குப் பெயரிட்டனர். நாராயணனுக்கு மூன்று பிராயத்தில் ஷாஹி காலஞ்சென்றுர். கணவனின் மரணத்தால் துன்பங்கொண்டிருந்த துர்க்காவதி, தன் மகவிற்கும் குடிகளுக்கும் வேண்டித்தான் ஆட்சிபுரிந்தாள். நாட்டுக் காரியங்களை விசாரிக்குமளவில் செந்தாமரைபோல முகம் மலர்ந்திருக்கும் அரண்மனையில் தனியே இருக்கும்போது வருந்தித் தன் விதியை நொந்துகொள்வாள். தன் கணவனின் ஆட்சிமுறையில் அவள் அணுவளவும் மாற்றவில்லை. தன் நாட்டை ஆளுவது தனது கடமையெனவும், கடவுளால் பணிக்கப்பட்ட கட்டளையெனவும் எண்ணினுள். தன் ஆட்சிக்குக் கேடு நேராவண்ணம் தினமுஞ் சிந்தனை செய்துவந்தாள்.

அக்பரிடம் கவர்னராக வருவோர் பலர் கர்ப்ப மண்டலத்தைப் படையெடுக்க அனுமதி கேட்டனர். ஆனால் ஒருவருக்கும் அவர் அனுமதி கொடுக்கவில்லை. அவருக்கு வல்லமையுடனும் நீதியுடனும் ஆட்சி புரியும் அரசரிடம் நன்மதிப்புண்டு. குடிகளின் தாய் என்ற பெயரோடு ஆட்சிபுரியும் ஒரு க்ஷத்திரிய மாது துர்க்காவதி யென்றும் எல்லாக் குடிகளையும் ஜாதி பேதமின்றிப் பொதுவாக ஆண்டுவருகிறுள் என்றும் அறிந்திருந்தார். அரசியின் ஆட்சியில் நீதி நிலவியிருந்தது. தண்ணீருக்கு வசதியில்லாதவிடங்களில் கிணறு, குளம் முதலியன உண்டுபண்ணுதலும், அறச்சாலைகளும் ஆதுலர்க் கன்னசாலைகளும் ஆங்காங்கு ஏற்படுத்தலும், தேவாலயப்பணி செய்தலுமாகிய காரியங்களைச் செய்துவந்தாள். பரதகண்டத்திலே நீதி வழுவாதவாறு ஆட்சி நடப்பது கருப்பமண்டலமெனப் பெயராயிற்று நாட்டார் தொழிலில் வல்லவராய் விளங்கினுர்கள். பொதுவே கர்ப்பமண்டலம் திருமகளுக்கு உறைவிடமாகவே காணப்பட்டது.

ஆஸப் கான் கவர்னராக வந்தபோது அவனுடைய இடையரு முயற்சியால் கர்ப்பமண்டலத்தின்மீது படையெடுக்க அனுமதி வாங்

கினுன். ஒருபெண் ஆண்டுவரும் ஒரு சிறிய நாட்டை எளிதில் தன வசமாக்கிவிடலாமென அவன் எண்ணினுன். அவளுடைய வீரத்தையும் தைரியத்தையும் அவன் உணரவில்லை.

சக்கிரவர்த்தியின் கடல்போன்ற படையோடு அரசியால் எதிர்க்க முடியுமா? அவளுடைய சிற்றூருக்குள்ள பலமுண்டா? தன் நாட்டைப் பாதுகாப்பதற்கு ஆசை அதிகமிருந்தாலும் அது கைகூடவில்லை.

சுதந்திரம் வேண்டும், இல்லையேல் கர்ப்ப மண்டலம் தன்னிடம் விட்டு ஒழியும்போது உயிரும் போகவேண்டும் எனத் தீர்மானித்துச் சண்டைக்கு வாளேந்தி வெளியே வந்தாள். அரசியின் கோலத்தைக் கண்ட அனேகர் உதவிபுரிய முன்வந்தனர். உடனே 8000 குதிரைகளையும் 2000 யானைகளையும் சேர்த்துவிட்டனர். நகரத்திலுள்ள யாவரும் படையில் சேர்ந்துவிட்டனர்.

அதிதீரையான தங்கள் அரசியின் கொடிக்கீழ் நின்று சாகும்வரைச் சண்டை செய்ய பிரஜைகள் தீர்மானித்தனர். ஆஸப்கான், ஆட்சிபுரிவது பெண்ணாகையால் சண்டை செய்ய வேண்டி வராதென வெண்ணிக் குறைந்த சேனையோடு வந்தான். கர்ப்ப மண்டலத்தையடுத்தபோது தனது மடமையை யுணர்ந்து வருந்தினுன். திரும்புவதிழுக்கென வெண்ணிச் சண்டைசெய்தான். தன்சேனைகள் தோற்று ஆஸப்கான் தப்பினுன். கர்ப்ப மண்டலத்திலுள்ள யாவரும் சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர். அரசியின் மனமிருண்டிருந்தது. உவகையின்றி ஒடுங்கிற்று. பெரும்படையோடு நமக்கு எதிர்த்து நிற்க ஆற்றலில்லை. எப்போதும் இதை ஆட்சி புரிவதெங்ஙனம்? என எண்ணினுள்.

1½ ஆண்டுகழித்து ஆஸப்கான் பெரும் படையோடு வந்து எதிர்த்தான். கர்பமண்டலத்தை அடக்கிவிட்டோமென உறுதியாக நினைத்தான். அரசியை அவள் பதவியிலிருந்து மாற்ற வேண்டுமென விளம்பரமுஞ் செய்தான்.

பகைவருடைய படைபெடுப்பைத் தடை செய்யும் முயற்சியில் ஜீவத்தியாகம் செய்ய வேண்டுமென அரசி திடமாக எண்ணிவிட்டாள். பெரியசேனையைத் திரட்டிக் கோட்டைக்குச் சென்று சண்டை செய்தாள். இம்முறையும் ஜயலக்ஷுமி ராணியை ஆசீர்வதித்தாள். ஆஸப்கானுக்குத் தோல்வி கிடைத்ததுமல்லாது அவனுடைய சேனைகள் சிதறுண்டுபோயின.

கர்ப்பமண்டலத்தைத் தனது படைகளால் அடக்கவியலாதென்று ஆஸப்கானுக்கு உறுதியாயிற்று. சில தூதரையனுப்பிப் படைவீரருக்குப் பொருளுதவி அவர்செருக்கைக் குலைத்துவிட்டான். கர்ப்பமண்டலத்துக்குள் கலவரங்கள் உண்டாயின. மூன்று முறையும் படைபெடுத்தபோது அரசிக்குத் தன் எளிய நிலை புலப்பட்டது. தீரமுள்ள பலர் சேனையிலில்லை. ஆண்மையுடையோர் அகன்றனர். சுயநலம் பேணி நாட்டின் நல்வாழ்வைக் கெடுத்துவிட்டனர். தம்நாடு அன்னியருடைய ஆளுகைக்குட்பட்டது. ஒரு சிறு இன்பத்தை விரும்பி உகந்தோம் துன்பத்தி லழுந்துவது என்ன மடமை?

நாடெங்கும் கலவர மேற்பட்டிருந்ததினுல் பொதுஜனங்களும் உதவிபுரிய முன்வரவில்லை. அரசியின் ஆசை அகன்றுவிட்டது. தனது ஆட்சியினுடையவும் வாழ்க்கையினுடையவும் இறுதி வந்ததென அறிந்துகொண்டாள். மரணம் வரையிலும் சண்டை செய்யலாமென்ற உறுதி கொண்டதினுல் பேருவகை யெய்தினுள். தன்னிடம் பக்தியுள்ள பலர் உதவியைக் கொண்டு போர் புரிந்தாள்.

தன் அன்பிற்குறைவிடமாகிய 14 பிராயத்து மகனையும் சண்டைக்குக் கூட்டிச் சென்ருளென்ருல் போர்புரிந்ததிறனைக்கூறவும்வேண்டுமோ?

காலை முதல் மாலை வரையிலும் சண்டை நடந்தது. அரசியின் அருமைப் புதல்வன் புரவியிலிருந்து நிலஞ்சாய்ந்தான். உதிரம் பெருகி யாக்கை எங்கணும் வழிந்தது! அரசியினிடம் இதை அறிவித்தனர். அப்போது "நான் இல்லாதிருப்பின் படையாளிகள் பயங்கொள்வார்கள். அவன் மாண்டானுயினும் ஒரு வீரபுருஷனுகவே மாள்கிறுன். பரமபதத்தில் வைத்துக் கண்டுகொள்வோம்" என்று கூறி விடாமல் போர்புரிந்தாள். இப்பெண்மணியின் மனவூக்கமென்னே! தீரத்தின் வன்மை யென்னே! தன்னையும் நாட்டையும் பற்றிய மதிப்பு எவ்வளவு? விடுதலைக்கு விழைந்து நிற்கும் நாட்டில் இவரைப்போன்ற பெண்மணிகளே தேவை,

அநேகநேரம் போர்புரியவேண்டியதாயிற்று. அம்பு ஒன்று தனது கண்ணில் தறிக்கவே வெடிகுண்டேற்ற கடுவாயைப்போல ஆஸப்கானுடைய படையில் பல பாகங்களை நாசப்படுத்தினுள். பெரும்படையோடு எதிர்க்க யாரால்முடியும். அவன்படைகள் நாலுபக்கமுஞ்சூழ்ந்தன. அங்கமுழுவதும் அம்புகள் பாய்ந்தன, போர்க்களத்தையும் தன் நாட்டையும் நோக்கி அண்டையில் நிற்போர் அறியதன் முன்னர், நமது வீரத்தாய்—கர்ப்பமண்டலேஸ்வரி—தன் கைவாளால் கழுத்தை வெட்டிக்கொண்டு மாண்டாள். உற்றவிடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர் பற்றலரைக் கண்டாற் பணிவரோ?

ஊன உடல் அரசமரியாதையோடு அடக்கஞ் செய்யப்பட்டதாம், —நவசக்தி.

விளம்பரம்.

அறிவித்தல்.

1924 ம் ஆடு தைமீ 1 வ தொடக்கம் மார்கழி மீ 31 வ வரைக்கும் இதன்கீழ் குறிக்கப்படும் வேலைகளை செய்வதற்கும் சாமான்களை கொடுப்பதற்குமான கேள்விப் பத்திரங்கள் 1923 ம் ஆடு கார்த்திகை மீ 10 வ சனிக்கிழமை 10 மணிவரையிலும் என்னுல் ஏற்கப்படும்.

1. 16 (Century) லாம்புகள் குறித்ததெருக்களுக்கு ஏற்றல்.

2 குப்பைவண்டிகளுக்கு பெலனுள்ள நூக்கு மாடுகளும் வண்டிக்காரர்களும் கொடுத்தல்.

3 பின்வரும் சாமான் கொடுக்க.

ஊர் அரிசி புசல் ஒன்றுக்கு, செங்கல்லு ஆயிரத்துக்கு, குழை சுண்ணும்பு புசல்ஒன்றுக்கு கிடுகு 100 மட்டைக்கு, தென்னுக்கு, நார்க்கடகம் ஒன்றுக்கு தேங்காய் எண்ணை கலன் ஒன்றுக்கு தும்புக்கட்டு ஒன்றுக்கு மண்ணெண்ணை கலன் ஒன்றுக்கு.

W. G. Vallipuram,
சுகாதாரசங்கத்தலைவர்.

சுகாதாரசங்கக்கந்தோர்
1923 ம் ஆடு கார்த்திகை மீ 1 வ.
(G 347.)

பாழ்நிலங்களின் கட்டளைச்சட்டத்தைப்பற்றிய அறிவித்தல்.

1897-ம், 1899-ம் 1900-ம் 1903-ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னுற் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடக்கையுள்ளவர்களென உரித்துப் பேசுபவர்கள் யாரு முண்டானுல் அவர்கள் 1923-ம்ஞு ஒக்டோபர்) ஐப்பசிமீ 26-ந்தேதியிலிருந்து மூன்றுமாசத்துள்ளே வடமாகாண அரசாட்சி ஏசன்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டுச் சொல்லப்பட்டகாணிகளுக்கு அல்லது அதிலொன்றுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உருத்துண்டெனச் சாதித்தாலன்றி, அவ்வரசாட்சி ஏசண்டரவர்கள் மேற்சொல்லப்பட்ட சட்டங்களினுல் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப் பேசப்படாததாகிய குறித்த காணிகளை அல்லது காணியை முடிக்குரியதெனத் தமதுகைச் சாத்திட்டு வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

எல். டபிள்யு சி. ஷிறடர்,
வடமாகாண அரசாட்சி ஏசண்டு.

குறிப்பு:—இக்காணிகளைவற்றிலேனுமுள்ள வழிபுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

கட்டிய காணிகளின் விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதியைச்சேர்ந்த நவாலி என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் பிரதியில் விபரித்தபடியே கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள்:—

பிரதமபடம் 6,004.

காணித்துண்.	காணிப்பெயர்.	விசாலம்: ஏ.	று.	ப.
1	கல்லுண்டா	2	1	3
2	டை	11	3	30
3	டை	8	1	21
4	டை ரேட்டருகே சேமிக்கப்பட்டநிலம்	0	1	2
		22	3	16

எல்லைகளாவன: வடக்கு காரைநகிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் போகும் ரேட்டு, சி. தம்பையா உரித்தாடும் கல்லுண்டா, எம். சுப்பையா உரித்தாடும் கல்லுண்டா, எம். நாகலிங்கம் உரித்தாடும் கல்லுண்டா, சுப்பையா பெண் பாறுவதி உரித்தாடும் கல்லுண்டா, என். அருணுசலம் உரித்தாடும் கல்லுண்டா, கணபதி மகள் அன்னப்பிள்ளை உரித்தாடும் கல்லுண்டா, செல்லக்குட்டியின் மனைவி உரித்தாடும் கல்லுண்டா, சி நாகலிங்கம்உரித்தாடும் கல்லுண்டா, கெ. செல்லமுத்து உரித்தாடும் கல்லுண்டா, காரைநகிலிருந்து யாழ்ப்பாணம்போகும் ரேட்டு; கிழக்கு ஆனைக்கோட்டைக் கிராமஎல்லை; தெற்கும் மேற்கும் முடியால் உரித்தாடும் கல்லுண்டா.

அறிவித்தல் இலக்கம் 8,457, யாழ்ப்பாணம்.
(G. 343.)

பாழ் நிலங்களின் கட்டளைச் சட்டத்தைப்பற்றிய அறிவித்தல்.

1897-ம், 1899-ம், 1900-ம், 1903-ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணிகளிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப் பேசுபவர்கள் யாருமுண்டானுல், அவர்கள், 1923 ம்ஞு (ஒக்ரோபர்) ஐப்பசி மாதம் 26ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே வடமாகாண அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலொன்றிற்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, அவ்வரசாட்சி ஏசண்டரவர்கள் மேற்சொல்லப்பட்ட சட்டங்களினுல் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகளை அல்லது காணியை முடிக்குரியதெனத் தமது கைச்சாத்திட்டு வெளிபரக்கப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

பி. கோன்ஸ்ரன்ரயின்,
வடமாகாண அரசாட்சி ஏசண்டர்.

குறிப்பு:—இக்காணிகளைவற்றிலேனுமுள்ள வழிபுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

கட்டிய காணிகளின் விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சி மேற்குப் பகுதியைச்சேர்ந்த உடுப்பிட்டியிலுள்ள தனக்காறக் குறிச்சி என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்கும் காணித் துண்டுகள்:—

பிரதமபடம் 5,182.

காணித் துண்டு.	காணியின்பெயர்.	விசாலம். ஏ.	று.	ப.
1	குளுதேவன் கொட்டலை	0	2	18
2	கொட்டலை	0	0	35
3	டை	0	3	25
4	தொடைகாமன்பதி	0	1	18
5	டை	0	2	23
6	சுறுந்தெணி	0	1	23
7	டை	0	2	29
8	சுறுந்தெணிக்குளம்	0	1	6
10	சுறுந்தெணி	0	3	25
11	டை	1	1	14
12	டை	1	0	23
14	டை	0	2	0
15	சுறுந்தெணி (ரேட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்)	1	0	39
16	ரேட்டருகு நிலம் (ரேட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்)	0	2	29
17	குமுழம் புலம்	0	1	11
18	டை	0	1	16
19	கல்லம்பார்	1	1	6
20	கல்லம்பார் (பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம்	0	1	0
21	முக்கிளுவம்புலம்	2	2	7
22	புதுவயல்	0	0	19
23	கிராய்வயல்	0	0	13
24	கல்லம்பார்	0	0	17
26	காட்டுக்கு வடக்கு	1	3	34
27	டை	0	1	0
28	கலட்டி	6	3	3
30	யமங்கலை	3	2	24
31	பால்மோட்டை	0	1	4
32	டை	0	1	24
33	டை	0	1	0
34	டை	0	2	10
35	டை	2	2	0
36	ரேட்டருகு நிலம் (ரேட்டுக்குச் சேமிக்கப்படவேண்டியது)	0	2	12
37	பால்மோட்டை	0	2	7
38	டை	0	1	18
		33	0	22

எல்லைகளாவன:-வடக்கு-குமாரசாமி பெண் சின்னத்தங்கச்சி உரித்தாடும் குளுதேவன் கொட்டலை, என். மயில்வாகனம் மைம் பெண் சிதேவன் உரித்தாடும் கொட்டலை, எஸ். குமாரசாமி உரித்தாடும் தொடைகாமன்பதி, வீ. கந்தரும்மறுபேரும்உரித்தாடும்தொடைகாமன்பதி எஸ். வீரகத்தியும் மறுபேரு முரித்தாடும் சுறுந்தெணி, வி நிற்சிங்கரின் உரிமைக்காரர் உரித்தாடும் சுறுந்தெணி, இ. இளையகுட்டி உரித்தாடும் சுறுந்தெணி முடியால் உரித்தாடும் சுறுந்தெணி (5,182ம் பி படத்தில் 9 ம் காணித்துண்டு) வி. பொன்னையாவும் மறுபேரு முரித்தாடும் சுறுந்தெணி, வி. வேலுப்பிள்ளையும் மறுபேரு முரித்தாடும் சுறுந்தெணி, முடியால் உரித்தாடும தரவை, யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறைக்குப் போகும் ரேட்டு, முடியால் உரித்தாடும் தரவை, கெ. செல்வத்துரையும் மறுபேருமுரித்தாடும் குமுழபுலம், எ. சின்னத்தம்பி உரித்தாடும் புதுவயல், வி. செல்லத்துரையும் மறுபேரு முரித்தாடும் கல்லப்பர், வி. பொன்னையாவின் மகள் நல்லாப்பிள்ளை உரித்தாடும் புதுவயல், கெ. வேலன் மைம்பெண் சின்னவள் உரித்தாடும் கிராய் வயல், எ. சந்தையாபெண் பாறுவதியும் மறுபேரும் உரித்தாடும் காட்டுக்குவடக்கு, கெ. செல்லையா பெண் அன்னம்மாவும் மறுபேரு முரித்தாடும் காட்டுக்கு வடக்கு, வி. சின்னத்தம்பியும் மறுபேரும் உரித்தாடும் காட்டுக்கு வடக்கு, வி. முருகுப்பிள்ளை பெண் பொன்னு உரித்தாடும் காட்டுக்கு வடக்கு, செ. செல்லையாவும் மறுபேரும் உரித்தாடும் காட்டுக்கு வடக்கு உடுப்பிட்டிக்குளம், கிழக்கு-உடுப்பிட்டிக்குளம், எஸ். சுப்பிரமணியம் உரித்தாடும் காட்டுக்கு வடக்கு, வி. முருகுப்பிள்ளை பெண் இலட்சுமி உரித்தாடும் பால்மோட்டை, என். மயில்வாகனம் மைம் பெண் சிதேவன் உரித்தாடும் பால்மோட்டை, இராமு பொன்னையா பெண் ஆராத்தையின உரிமைக்காரர் உரித்தாடும் பால்மோட்டை, இ வேலுப்பிள்ளையும் மறுபேரு முரித்தாடும் பால்மோட்டை, பண்டகப்பிள்ளையார்கோயில் உரித்தாடும் பால்மோட்டை, எஸ். சீனிவாசகம் பெண் பாறுவதி உரித்தாடும் பால்மோட்டை, கெ. செல்லையாபெண் அன்னம்மாவும் மறுபேரு முரித்தாடும் பால் மோட்டை, கே. சிங்காரவேலு உரித்தாடும் பால்போட்டை, தெற்கு-கரவெட்டியிலிருந்து தொண்டமனுற்றுக்குப் போகும் ரேட்டு, முடியால் உரித்தாடும் உடுப்பிட்டிக் கிராய் அல்லது பரவணிக்கலட்டி 5,182 ம் பி படத்தில் 29 ம் காணித்துண்டு) வி. கிட்டினரும் மறுபேருமுரித்தாடும் முக்கிளுவம்புலம் (5,182 ம் பி படத்தில் 25ம் காணித்துண்டு), கரவெட்டியிலிருந்து தொண்டமனுற்றுக்குப் போகும் ரேட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறைக்குப் போகும் ரேட்டு, மேற்கு-கரவெட்டியிலிருந்து தொண்டமனுற்றுக்குப் போகும் ரேட்டு, முடியால் உரித்தாடும் தரவை.

குறிப்பு:—மேற் சொல்லப்பட்ட எல்லைகளுக்குட்பட்டதாகிய கீழ்க்குறிக்கப்படும் காணித்துண்டு இவ்வறிவித்தலின்னும் விலக்கப்பட்டிருக்கின்றதென்பதையும் அதன் விசாலமாகிய 2 ஏக்கர் 1 றூட் 7 பேட்சும் மேற் குறித்த 33 ஏக்கர் 22 பேட்சிக்குளடங்கவில்லையென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

பிரதமபடம் 5,182

காணித்துண்டு	காணி. பெயர்	விசா. ஏ.	று.	ப.
13	சுறுந்தெணி	2	1	7

அறிவித்தல் இலக்கம் 8,458 யாழ்ப்பாணம்
(G. 344)

அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் திருகோணமலை 6-ம் நம்பர்க் காசுக்கடை வீதி மு. தாமோதரம்பிள்ளை & இராசலிங்கம் இடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டைசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

நம்.	மீ	வ	ரூ.	சத.	நகை விபரம்.
F 1922ஆ					
1343	1	6	8		வெ. அடுக்குக்காப்பு சோ. 1. சு. இ.
1443	1	12	6		தங்க காப்பு 1
1459	1	13	55	04	சிறுபட்டணங்காப்பு சோடி 1
1539	1	20	18		பூசாந்திரமுடன் மணி 4
1624	1	27	7	04	கற்சறனைப்பூ சோடி 1
1663	1	30	25	04	சிறு பாதசரம் சோடி 1
1812	2	13	10		வெ. ஒட்டியாணம் 1
1882	2	19	25	04	பின்1,சிறு 4பட்டு மணிக் கோர்வை 1
1942	2	25	18	54	வெ. கொலுசு சோ. 1
1959	2	28	27	04	வெ பாதசரம் சோ1 சு.இ
1960	2	28	26	54	அரைஞாண்கொடி 1 பழைய சிறு பொன் தாலிக்கொடி 1
2020	3	6	6		இமிற் சிறப்புகல்மோதி 1
2061	3	11	14		வெ. அடுக்குக் காப்பு சோடி 1, சு. இ.
2146	3	18	75		பத. பிறை பொட்டுடன் திருக்கொன்றைமணிக் கோவை 1
2176	3	20	90	04	கல் விழு. பத. எஸ் அட்டியல் 1
2196	3	22	56		பவுண் 4
2244	3	27	18		வெ. பழைய பாதசரம் சோடி 1
2363	4	5	20		இமிற். தோடு சோடி 1
2331	4	6	21		தாலித்தட்டு 8 குடம் 1 பின் 1
2336	4	7	6		பொட்டு பதக்கம் 2 சிறு பொன் விலங்கு 1
2389	4	8	23	04	கீலக்கல் மோதிரம் 1 மோதிரம் 1
2419	4	11	10		சு. இ சிறு இமிற். கடுக்கன் சோடி 1
2436	4	12	6		பழைய வெ. கடசம் சோடி 1 சு. இ.
2532	4	22	20		பழைய கற்றோடு சோ. 1 பழு. பதக்கம் 1
2571	4	24	13		முறி. பூசாந்திரம் 1
2580	4	27	20		ஒ. கு. இ பின் பூசாந்திரமுடன் மணி 9
2581	4	27	15		பூசாந்திரமுடன் மணி 10
2597	4	29	25		கல் முத். விழு பதக்கத்துடன் சவுக்கமணிக் கோவை 1 சிறுசற் சொருகுதோடு 1 சு. இ. கல் முருகு சோ1
2626	5	1	75		எஸ் அட்டியல் 1
2667	5	7	15		தெட்சாவந்தனம் 1
2697	5	12	7		மணி 4
2736	5	16	210		சப்புராதவளையல் 4
2770	5	19	10		பழைய தண்டை சோ. 1
2804	5	22	7		கொப்புச் சிமிக்கி சோ. 1
2823	5	23	20		குப்பி சோடி 2 பூசாந்திரக்கடுக்கன் சோடி 1
2883	5	27	15		சிறுபடம் 1 பட்டைகூர் 1 வெ. குழல்க்காப்பு சோ.1 சு. இ. அடுக்குக் காப்பு 1
2895	5	28	12		பூசாந்திரம் 1
2907	5	29	18		பழு. சவுக்கமணிக் கோர்வை 1ல் மணி 21
2917	5	30	47		பத திருக்கொன்றைமணி கோவை 1
2990	6	5	300		½பவுண் 70 கோர்த்த மாலை 1
3049	6	8	50		பூரானட்டியல் 1
3118	6	13	20	04	கல் மயிர்மாட்டி சோடி1 கல் முருகு சோடி 1
3127	6	14	26		சவுக்கமணிக் கோவை 1 குப்பி சோடி 1
3128	6	14	55	04	கொன்றைமாலை 1
3185	6	20	14		வெ. பாதசரம் சோடி 1
3193	6	21	20		தங்க மோதிரம் 1
3204	6	22	7	50	கற்காதுப்பூ சோடி 1 வளையல் 7 பழுது.
3211	6	22	13		தோடு சோடி 1
3244	6	24	10		இதட்பூ 1
3249	6	25	30	30	கு. வை. பவுண் 1 கு. வை. ½பவுண் 2 இலை மாலைத் துண்டு 1
3250	6	25	15		சுடர் திருகு பூ 1
3251	6	25	100		கொன்றை மாலை 1 குச்சடி 1
3265	6	26	11		சிறு பொன்காப்பு சோ.1

விற்பனவு:—ருதிரோற்காரி வருடம் கார்த்திகை மாதம் 5-ந் திகதிக்குச் சரியான 1923-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி செவ்வாய்க்கிழமை 9 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகேங்கலாக மிகுதி டை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,
(Mis. 405). வெந்திஸ்மேஸ்தர்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva PrakasaPress, Jaffna.